# நெல் நிலைத்தும் நீடித்துமிருக்க வெளியிடபெட்ட கும்பளாங்கி அறிக்கை




இரண்டாவது அனைத்துலக நெல் ஆண்டான 2004 ஆம் ஆண்டு நெல் விளையும் மாநிலங்களைச் சேர்ந்த ஐம்பத்து ஏழு அமைப்புகளின் பிரதிநிதிகள் கூடி இருந்தோம். சுற்றுச்சூழல் நுகர்வோர் உரிமைகள், பண்ணைப்பணியாளர், கொள்கைகள், நிலைத்த நீடித்த பண்ணையம் ஆகிய துறையினர் கூடி விவாதம் செய்தார்கள். நமது கலாச்சாரம் நெல், உணவுக்கு உத்தரவாதத்துக்கு நெல் அடிப்படை, நெல் நமது சரித்திரம், என்பன குறித்து விவாதிக்கப்பட்டது. வழி வழி வந்த நெல் சாகுபடி முறைகள், அவை சந்தித்த சிக்கல்கள், அவற்றுக்குத் தீர்வாக இன்று முன்வைக்கப்படும் தீர்வுகள் குறித்து அலசி ஆராய்ந்த அரங்கம் கீழ்க்கண்ட புரிதலுக்கு வந்தது.

1. ஆய்வுக் கூடத்தில் தயார் செய்யப்படும் நெல் விதைகளோ, மரபணு மாற்று நெல் இனங்களோ உணவு உத்தரவாதத்திற்கு எள்முனையளவும் பங்காற்ற முடியாது. இந்த நாட்டில் நெல் நிலைத்திருக்கவும் அது உதவாது. மாறாக இவைகள் உழவர் சமூகத்திற்கும் உணவின் மீதான இறையாண்மைக்கும் அச்சுறுத்தலாகவே உள்ளன.
2. பசுமை புரட்சியானது, உழவையும் உழவர் சமூகத்தையும் சிதைப்பதில் முடிந்தது. போதிய-பாதுகாப்பான உணவு வழங்குவதில் தோற்றது. மானம் மரியாதையோடு கூடிய வாழ்வு கொடுப்பதில் தோற்றுப்போனது.
3. பசுமை புரட்சியால் விளைச்சல் சரிந்தது. செடிகள், விலங்குகள், மனிதர்களுக்கு தீங்கு விளைத்தது. சூழல் நலம் கெட்டுப்போனது. உழவர்களுக்குப் பேரிழப்பைக்கொடுத்தது. இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகளின் மீதான சார்பைப் படிப்படியாக விட்டொழிக்க வேண்டும். மேலும் இன்று நிலைத்த, நீடித்த உழவுக்கும் பாதுகாப்பான உணவுக்கும் பூச்சிக்கொல்லிகள் தேவை இல்லை என்பது சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுவிட்டது.
4. நமது முன்னுள்ள பாதை இதுதான். பண்டைய பழக்க வழக்கங்களை உயிர்ச்சூழலுக்கு ஏற்றவைகளை, நீடிக்க வல்லது. உழவியல் உத்திகளைகைக்கொண்டு கூட்டாகச் செயல்பட வேண்டும்.
5. மேலே கூறப்பட்ட வழிமுறைகள் நாட்டு மக்களுக்குப் போதிய, பாதுகாப்பான உணவை வழங்க முடியும்.
6. சிறு, குறு உழவர் குடும்பங்களின் உணவுத்தேவைக்கே நாம் முன்னுரிமை அளிக்கிறோம்.
7. உழவு தொடர்பான முடிவெடுத்தல், ஆராய்ச்சி, விரிவாக்கம் போன்ற பிரிவுகள், நமது உழவர்கள், பெண்கள், பழங்குடியினரின் காலத்தை வென்ற அறிவுடைமை மீது கண்ணோட்டம் புரிதலும் கொண்டு செயல்பட வேண்டும்.
8. வயிற்றுக்குச் சோறு கிட்டுவதற்கு உணவு, வாழ்வு மீதுள்ள இறையான்மை இன்றியமையாதது.
9. நிலமற்ற தொழிலாளிகள், உள்ளூர்வாசிகள், கைவினைஞர்கள், சுய தொழில் புனைவோர், சிறு-குறு உழவர்களின் உணவு பாதுகாப்பிற்கு மேலே கூறப்பட்ட அணுகுமுறையே சிறந்தது.
10. இந்திய வேளாண் துறையில் வாழையடி வாழையென வந்த அறிவுச் செல்வம், பழக்க வழக்கம் போன்றவை ஆவணப் படுத்தப்படவில்லை.
11. காலம் காலமாக நமது உழவர்கள் அனுபவ அறிவையும், உடைமையையும் பகிர்ந்து கொண்டுள்ளார்கள். இது உலகமயமாக்கம், சந்தை மயமாக்கம், அனைத்து நாடுகளின் வர்த்தகம், தாராளமயமாக்கம் போன்ற சூறைக்காற்றுகளால் அடித்துச் செல்லப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.
12. பன்னெடுங்காலமாக உள்ளூர் மக்களுக்கு பொது நிலங்களே உணவின் மீதான இறையாண்மையை வழங்கியது. பொது நிலங்களின் மீதான உரிமை உள்ளூர் மக்களுக்கே உரித்தாக்கப்பட வேண்டும்.
13. அனைத்து நாட்டு நெல் ஆண்டுக்குப் பிறகும் நெல் நிலைத்தும் நீடித்துமிருப்பதற்கு சுய உணர்வுடன் கூடிய, வெளிப்படையான கூட்டு நடவடிக்கை தேவை.

**மேலே கண்ட புரிதலின் அடிப்படையில் கீழ்க்கண்டவற்றை நாங்கள் பறை சாற்றுகிறோம்.**

1. நம் முன்னுள்ள பாதை இதுதான், வழிவழிவந்த, உயிர்ச்சூழலுக்கு இசைவான, சமூகத்தின் அறிவு, உள்ளூர் பழக்கவழக்கங்கள், முறைகளை ஏற்று, காத்து, மேம்படுத்துவது மட்டுமே நேர்வழி.
2. நெல் சாகுபடியில் இரசாயன உரம், பூச்சிக்கொல்லி பயன்பாடுகள் தடை செய்யப்பட வேண்டும்.
3. இயற்கை வழியில் வழிவழி வந்த உழவியல் முறைகளுக்கு உயர்வளிக்க ஆதரவு தந்து ஊக்கமளிக்க வேண்டும்.
4. ஆய்வுக்கூடங்களில் தயார் செய்யப்படும் விதைகளையும், மரபணு மாற்று விதைகளையும் புகுத்துவது தடை செய்யப்பட வேண்டும்.
5. கடந்த பல ஆண்டுகளாக உழவர்கள் ஆராச்சியில் கண்டு பல்லாயிரக்கணக்கான விதைகளைப் பயிர் செய்து காத்து வைத்திருந்தார்கள். கடந்த 40-50 ஆண்டுகளாக இவற்றின் கருவிதைகளை இந்நாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களும், பன்னாட்டு நிறுவனங்களும் பதுக்கி வைத்துள்ளன. இந்தக் கரு விதைகள் உழவர்களுக்கே திருப்பியளிக்கப்பட வேண்டும்.
6. செடி, கொடி, மரப் பயிரினங்களோ, உற்பத்தி செய்யப்பட்டவையோ, செய்முறையோ நமது மூதாதையர் அறிவோ, செயல் முறையோ எந்த மட்டத்திலும் எந்த சட்டம் மூலமாகவும் காப்புரிமை என்ற பெயரில் ஏகபோகமாக்கப்படுவதை அனுமதிக்கலாகாது.
7. நடப்பில் உள்ளதாயினும் நாளை வரவிருப்பதாயினும் எல்லா விதமான வர்த்தக ஒப்பந்தத்திலிருந்தும் உழவுத்துறையை விடுதலை செய்ய வேண்டும்.
8. நெல் நிலைத்தும் நீடித்துமிருக்க நாம் எல்லோரும் கூட்டாகச் செயல்பட வேண்டும்.

**2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 முதல் 11 ஆம் நாள் முடிய கும்பளாங்கி (கேரளா)யில் நடைபெற்ற நெல்லை குறித்த இந்தியப் பட்டறை வெளியிட்ட அறிக்கை**

Save our Rice Campaign in India is facilitated by Thanal, Thiruvananthapuram and IIRD, Aurangabad

THANAL, H-3 Jawaharnagar, Kowdiar P.O., Thiruvananthapuram, Kerala, India. PIN-695 003
Tel / Fax: +91 471 2727150. E-mail: saverice@thanal.org, thanal@md4.vsnl.net.in
Web: www.thanal.org

save our rice

Arsha Offset